DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | மனோஜ்குமார் (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 21.04.2026**

கடந்த 08.10.2024ம் தேதி எதிரி என்னை அடித்ததன் பேரில் நான் போலிசாரிடம் புகார் கொடுத்து மனு ரசீது பெற்றேனா என்றால் பெற்றேன். சம்பவம் நடந்ததற்கு பின்னிட்டு எவ்வளவு நேரம் கழித்து காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சுமார் 1/2 மணிநேரம் கழித்து சென்றேன். யார் யார் புகார் கொடுக்க சென்றோம் என்றால் நானும் மேலாளர் சுகண்யா அவர்களும், அவரது குடும்பத்தினரும் எனது வங்கியில் வேலை பார்க்கும் 2 – 3 நபர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் பெயர்கள் நினைவில் இல்லை. கடந்த 08.10.2024ம் தேதி நான் மட்டும்தான் புகார் கொடுத்தேன் என்றாலும் வாதி சுகண்யா புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

கடந்த 04.10.2024ம் தேதி வாதி சுகண்யா புகார் அளிக்க சென்றபோது யார் யார் உடன் சென்றார்கள் என்றால் அவரும் அவரது தம்பியும் சென்றார்கள். நான் காவல்நிலையத்திற்கு வெளியே நின்றிருந்தேன். புகாரினை யார் எவ்வாறு

எழுதிகொடுத்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். கடந்த 04.10.2024ம் தேதி யார் யார் சுகண்யா அவர்களின் கேபினுக்குள் சென்று எதிரியை கூட்டி வந்தோம் என்றால் நானும், சாட்சி கௌதம் மற்றும் வினோத் ஆகியோர் சென்றோம். சம்பவத்தின்போது நான் காவல்நிலையத்திற்கு போன் செய்தேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று எதிரி எவ்வளவு நேரம் வாதி சுகண்யாவின் கேபினுக்கு வெளியே அமர்ந்திருந்தார் என்றால் சுமார் 1/2 மணிநேரம் இருக்கும். நான் சொன்ன தேதியில் நானும் சுகண்யாவும் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் சொல்வதுபோல கடந்த 04.10.2024ம் தேதி நான் கேபினுக்குள் சென்று எதிரியை வெளியே கூட்டிவரவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் வாதி சுகண்யா எங்களது வங்கியின் மூத்த மேலாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**